**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.700/2022 P.W.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | மீனாட்சி | க–பெ | வேலுசாமி |
| ஊர்: | : | பாதரக்குடி | சமயம்: | |
| வயது: | : | 62/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுவேலை | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.07.2025**

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

---------------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை.**

நான் தற்சமயம் பாதரக்குடியில் வசித்து வீட்டுவேலை செய்து வருகிறேன். அசா 1 எனது கணவர். தேதி நினைவில்லை 2017 ம் வருடம் பிப்ரவரி மாதம் ஒருநாள் நானும் எனது கணவரும் வீட்டை பூட்டிவிட்டு வெளியே சென்று விட்டு மதியம் 2.30 மணியளவில் வீட்டைதிறந்து பார்த்தபோது ஏற்கனவே எங்கள் வீட்டில் இருந்த 2 பீரோகள் உடைந்த நிலையிலும் 1 பீரோவில் சாவி இருந்த நிலையிலும் இருந்தது. அதில் இருந்த பீரோவில் இருந்த பணம் 3000 ரூபாயும் கேமரா மதிப்பு 5000 ரூபாயும் வெள்ளி சாவி கொத்து ஒன்று வெள்ளி குங்குமசிமில் ஒன்று 25 கிராம் எடை தங்க பட்டம் இரண்டு உள்ளிட்ட 13000 ரூபாய் மதிப்புள்ள பொருட்களை நபர் ஒருவர் திருடி சென்றார் என தெரிய வந்தது. பின்னர் இதுகுறித்து எனது கணவர் குன்றக்குடி காவல் நிலையம் சென்று நடந்த விபரங்களை சொல்லி புகார் அளித்தார். பின்னர் கைரேகை நிபுணர்கள் வீட்டிற்கு வந்தார்கள். போலீசார் விசாரணை செய்தார்கள். நான்கு நாட்கள் கழித்து போலீசார் விசாரணையில் திருடு போன நகைகள் கிடைத்துவிட்டதாக சொன்னார்கள். பின்னர் நீதிமன்றத்தில் மனு செய்து நிபந்தனையுடன் மேற்படி பொருட்களை எனது கணவர் மூலம் பெற்றுக்கொண்டேன்.

**குறுக்கு விசாரணை**

சம்பவ நடந்த தேதி சரியாக நியாபகம் இல்லை. சம்பவம் நடந்த அன்றே நான் புகார் அளித்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த மறுநாள் தான் புகார் அளித்தேன் என்றால் சரியல்ல. புகார் யார் எழுதியது என்றால் எனது கணவர். நான் காவல் நிலையம்செல்லவில்லை என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J
Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.07.24 06:39:40 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.700/2022 P.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | வேலுசாமி | த–பெ | சுப்பையா பிள்ளை |
| ஊர்: | : | பாதரக்குடி | சமயம்: | |
| வயது: | : | 72/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | வாட்ச்மேன் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.07.2025**

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

---

**முதல் விசாரணை.**

நான் தற்சமயம் பாதரக்குடியில் வசித்து வாட்ச்மேனாக பணி செய்து வருகிறேன். எனக்கு ஒரு பத்து வருடங்களுக்கு முன்பு விபத்து ஏற்பட்டு இந்த வழக்கு குறித்த சம்பவங்கள் அனைத்தும் மறந்து விட்டது. எந்தவொரு நிகழ்வும் நினைவில் இல்லை. போலீசார் 2017 ம் வருடம் என்னை விசாரணை செய்தார்கள். எதற்காக விசாரணை செய்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். கையொப்பம் அசாஆ1. எதற்காக கையொப்பம் இட்டேன் என்ற விபரம் எனக்கு தெரியாது.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

போலீசார் விசாரணையில் கடந்த 25.02.2017 அன்று காலை 9.00 மணியளவில் தனது மனைவியுடன் தன் சொந்த வேலைக்காக வீட்டை பூட்டி விட்டுசென்றதாகவும் பின்னர் காலை 11.30 மணியளவில் மீண்டும் வீட்டிற்கு வந்த போது கதவுகள் திறந்த நிலையில் இருந்தது. உள்ளே சென்று பார்த்தபோது பீரோவில் இருந்த பணம் 3000 ரூபாயும் கேமரா மதிப்பு 5000 ரூபாயும் வெள்ளி சாவி கொத்து ஒன்று வெள்ளி குங்குமசிமில் ஒன்று 25 கிராம் எடை தங்க பட்டம் இரண்டு உள்ளிட்ட 16000 ரூபாய் மதிப்புள்ள பொருட்களை நபர் ஒருவர் திருடி சென்றார் என தெரிந்த கொண்டு காவல் நிலையம் சென்று நடந்த விபரங்களை சொல்லி புகார் அளித்துவிட்டு தற்போது வழக்கு விசாரணயில் உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.07.24 06:39:46 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி